பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

25 01 2025 **SATURDAY** 6 45 **AM**

வணக்கம்-மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

- குடியரசு தினத்தை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்றிரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.
- தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- தமிழக மாணவர்கள் கல்வி மட்டுமல்லாமல், பல்வேறு துறைகளில் திறமைகளை வெளிப்படுத்துபவர்களாகவும் திகழ்வதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணி முழுமையாக முடிந்த பின்னர் மாதந்தோறும் மின்கட்டண கணக்கீடு நடைமுறைப்படுத்தப்படும் என்று மின்சாரத்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.
- ஜோஹர் சர்வதேச ஓப்பன் செஸ் போட்டியில் இந்தியாவின் இனியன் பன்னீர்செல்வம் பட்டம் வென்றார்

>>>>><<<<<

குடியரசு தினம் நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

அவரது உரை தொலைக்காட்சி மற்றும் வானொலியில் இரவு 7 மணிக்கு ஒலிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த உரை ஆகாஷவாணியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகிறது.

அவரது உரையின் தமிழாக்கம், இரவு மணி 9.30-க்கு மாநில அளவிலான அலைவரிசைகளில் ஒலிபரப்பு செய்யப்படும்.

>>>>>>><<<<<<<

தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நாளை முன்னிட்டு புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜூன்ராம் மெக்வால், தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார், தேர்தல் ஆணையர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

தேர்தலின் போது சிறப்பாக செயல்பட்ட மாநில மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு குடியரசுத்தலைவர் விருதுகளை வழங்கவுள்ளார்.

தேர்தலில் வாக்காளர் பங்கேற்பை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்ட அமைப்புகளுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தலின் போது ஒவ்வொருவரின் வாக்கு நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதால், வாக்களிப்பதில் இளைஞர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஜனநாயகத்தை வலுப்படுத்தும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பது ஒவ்வொரு வாக்காளரின் கடமை என்று சேலம் அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகள் தெரிவித்தனர்.

(வாய்ஸ் பைட் - மாணவிகள் 45 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

தமிழக மாணவர்கள் கல்வி மட்டுமல்லாமல், பல்வேறு துறைகளில் திறமைகளை வெளிப்படுத்துபவர்களாகவும் திகழ்வதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்ற கலைத்திருவிழா போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு, விருது மற்றும் சான்றிதழ்களை வழங்கி அவர் பேசினார்.

தமிழக மாணவர்கள் விளையாட்டில் மட்டுமல்லாமல், கலைத்துறையிலும் சிறந்து விளங்குவதாக அவர் தெரிவித்தார்.

மாநில அளவிலான போட்டிகளில் மட்டும் 13 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதாகவும் அவர் கூறினார்.

பள்ளிகளில் உடற்கல்வி பாட நேரத்தின் போது மாணவர்களுக்கு பாடம் நடத்தாமல், விளையாட அனுமதிக்க வேண்டும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் தண்ணீர் தொட்டி அசுத்தம் செய்யப்பட்டது தொடர்பான விசாரணையை சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என்று திமுக கூட்டணி கட்சிகள் வலியுறுத்தியிருப்பதை வரவேற்பதாக அஇஅதிமுக கூறியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. டி. ஜெயக்குமார் விடுத்துள்ள அறிக்கையில், தமிழக காவல்துறை சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், இந்த கோரிக்கை எழுந்துள்ளதாக கூறியுள்ளார்.

உண்மையான குற்றவாளிகளை கைது செய்ய சிபிஐ விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணி முழுமையாக முடிந்த பின்னர் மாதந்தோறும் மின்கட்டணம் கணக்கீடு செய்யப்படும் என்று மின்சாரத்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கோடை காலத்தில் மாநிலம் முழுவதும் தடையில்லாமல் சீரான மின்விநியோகம் வழங்குவது குறித்து சென்னையில் நேற்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

கடந்த ஆண்டு கோடை காலத்தின் போது, 20 ஆயிரம் மெகாவாட் அளவிற்கு உச்சபட்ச மின்தேவை இருந்ததாகவும், இந்த ஆண்டு 22 ஆயிரம் மெகாவாட் அளவிற்கு தேவை இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கோடை காலத்தில் தடையில்லாமல் மின்சாரம் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி விரைவில் முடிவடையவுள்ளதாகவும், ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்பட்ட பின்னர், மாதாந்திர மின் கணக்கீடு முறை கண்டிப்பாக நடைமுறைக்கு வரும் என்றும் திரு. செந்தில் பாலாஜி கூறினார்.

>>>>>>><<<<<<<

குடும்ப அட்டை தொடர்பான குறைதீர் முகாம் இன்று மாநிலம் முழுவதும் நடைபெறுகிறது.

நுகர்வோர் பாதுகாப்பு துறையின் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் இன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணிவரை இந்த முகாம் நடைபெறும்.

இதில் பொதுவிநியோக திட்ட குறைபாடுகள், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்குதல், தொலைபேசி எண் மற்றும் முகவரி மாற்றம் தொடர்பான திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>>><<<<<<<

திருவண்ணாமலை அண்ணாமலையார் மலையில் மண்சரிவு ஏற்பட்டு, உருண்டு விழுந்த 40 டன் எடை கொண்ட பாறையை உடைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடந்த மாதம் 1ஆம் தேதி பெய்த கனமழையின் போது, மண் சரிந்து குடியிருப்பு பகுதியில் பாறை உருண்டு விழுந்ததால், 7 பேர் உயிரிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து பாறையை அகற்ற வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து, அதை உடைக்கும் பணி கடந்த 3 நாட்களாக நடைபெற்று வருகிறது.

>>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

காஸாவில் ஹமாஸ் பிடியில் உள்ள இஸ்ரேல் ராணுவத்தைச் சேர்ந்த, நான்கு பெண்கள் குறித்த விவரங்கள் அந்நாட்டிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் அந்நாட்டிலிருந்து படிப்படியாக வெளியேற்றப்படுவார்கள் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

மகாகும்பமேளாவை முன்னிட்டு பிரயாக்ராஜுக்கு நேற்று மட்டும் 50 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வருகை தந்ததாக உத்தரபிரதேச மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

குடியரசு தினத்தை முன்னிட்டு, ஜம்மு காஷ்மீரில் பாரமுல்லா பகுதியை ஒட்டியுள்ள இந்திய – பாகிஸ்தான் எல்லையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற வைகை இலக்கியத் திருவிழாவை ஒட்டி நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி. பூங்கொடி பரிசுகளை வழங்கினார்.

>>>>>>><<<<<<<

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, பொய்யாவயல் அரசு உயர்நிலைப் பள்ளியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த மாணவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

திருவாரூரில் மாவட்ட அளவிலான புத்தக திருவிழாவை நேற்று தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திரு. லியோனி திறந்து வைத்தார்.

>>>>>>><<<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், சாமித்தோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைப்பதி தைத்திருவிழாவின் முக்கிய நிகழ்வான அய்யா வைகுண்டசாமி வெள்ளைக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி, கலிவேட்டையாடும் நிகழ்ச்சி நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

சென்னை, தூத்துக்குடி, எண்ணூர் துறைமுகங்களின் வளர்ச்சி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று தூத்துக்குடியில் நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

திருப்பதியில் வைகுண்ட ஏகாதசி இலவச டிக்கெட் விநியோகத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் குடும்பத்திற்கு திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் சார்பில் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை நேற்று வழங்கப்பட்டது.

>>>>>>><<<<<<<

சென்னை, ஜார்ஜ் டவுன் பகுதியில் சாலையோரம் குடியிருக்கும் குடிசைவாழ் மக்களுக்கு புதிய குடியிருப்புகளுக்கான தற்காலிக ஒதுக்கீட்டு ஆணைகளை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு நேற்று வழங்கினார்.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஜோஹர் சர்வதேச ஓப்பன் செஸ் போட்டியில் இந்திய கிராண்டமாஸ்டர் இனியன் பன்னீர்செல்வம் பட்டம் வென்றார்.

மலேசியாவில் நேற்று முடிவடைந்த இப்போட்டியில், 22 வயதான இனியன், ஒன்பது சுற்று போட்டிகளில் எட்டரை புள்ளிகளை பெற்று வெற்றி பெற்றார்.

இறுதிச்சுற்றில் அவர் வியட்நாமைச் சேர்ந்த கிராண்ட்மாஸ்டர் **Nguyen Van Huy** –யை வென்றார்.

>>>>>>><<<<<<<

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டி, சென்னை, சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட டிவென்டி டிவென்டி தொடரில் பங்கேற்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையே கொல்கத்தாவில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

>>>>>>><<<<<<<

ரூர்கேலாவில் நடைபெற்று வரும் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில்பெங்கால் அணி 5-3 என்ற கோல்கணக்கில் கலிங்கா அணியை வென்றது.

>>>>>>><<<<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி 2-1 என்ற கோல்கணக்கில் கேரளாவை வென்றது.

>>>>>>>END<<<<<<<